ஆதிக்க மனப்பான்மைக்கு எதிர்ப்பு

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா இலங்கையில் 10 சதம்	சென்னை: ஆவணி 19உ சனி வெளியூர்: ஆவணி 20உ ஞாயிறு	(4—9—54) (5—9—54)	மலர்: 2 இதழ்: 71

வேங்கையை விரட்ட வாரீர்!

வட நாடு வெள்ளையர் நாடாகிறது! தென்னாடு கருப்பர் பூமியாகிறது!

காங்கிரஸ் வீரர்களுக்கு அண்ணாவின் அன்பழைப்பு

கொடாச்சேரி தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில் பொதுச்செயலாளர் வேண்டுகோள்!

"காங்கிரஸ் தியாகிகள் விடுதலைக்காகப் போராடிய வீரர்களென்ற காரணத்தால்தான், புலி வேட்டையாடி புலியைக் கொன்றவர்களாக அவர்கள் இருப்பதினால்தான், இப்போது வேங்கையை விரட்ட அவர்களை அழைக்கிறேன்! தி. மு. கழகம், ஒரு விடுதலைப் பாசறையாக விளங்குவதினால்தான், வெள்ளையனை வெளியேற்ற விடுதலைக் கிளர்ச்சி நடத்திய பாசறையில் வீரர்களாக இருந்த காங்கிரஸ் தியாகிகளை அழைக்கிறேன்!

தி. மு. கழகம் சமூக, பொருளாதார, அரசியல் ஆகிய துறைகளில் மாபெரும் விடுதலை காண விழைகிறது! அரசியல் துறையில் ஏகாதிபத்தியமாய் மாறி இருக்கிற வடநாட்டின் பிடியிலிருந்து விடுதலை பெற போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறது!

"இந்திய அரசியல் சட்டம் வகுக்கும்வரை வெள்ளைக்காரன் இந்த நாட்டை வேட்டைக் காடாக வைத்திருந்தான்; அவனது ஆதிக்கம் அழிந்தான பிறகு, இந்திய அரசியல் சட்டம் உருவான நேரத்தில், அதை உருவாக்கிய வடநாட்டு முதலாளிகளெல்லாம் சேர்ந்து, தென்னாட்டை—திராவிடத்தை, வடநாட்டிற்கு அடிமையாக்கிவிட்டனர்; திராவிடத்திலிருக்கும் சர்க்கார்கள், கமிஷன் ஏஜெண்ட் சர்க்காராக, பில் கலெக்டர்களாக, தலையாட்டி சர்க்கார்களாக ஆக்கப்பட்டுவிட்டது! தென்னாடு கருப்பர் பூமியாகவும், வடநாடு வெள்ளையர் நாடாகவும், தென்னாடு தேயவும், வடநாடு வளரவும் வழி வகுத்தது இந்திய அரசியல் சட்டம்!

"தென்னாட்டிலுள்ள திராவிட அரசுகளெல்லாம் திராவிடரை இந்த நிலையில் வாழவைக்க முடிந்ததற்குக் காரணம், திறமையின்மையோ, அக்கறையின்மையோ அல்ல; திறமையும், அக்கறையும் உடையவர்களாக இருந்தாலும், அதிகாரம் இவர்களிடம் இல்லை!

"எவ்வளவு பெரிய யானையானாலும் சேற்றில் அமிழ்ந்து, படுகுழியில் வீழ்ந்துவிட்டால், எழுந்து நடப்பது சிரம சாத்தியமானதைப் போலத்தான், வடநாட்டு ஆதிபத்தியம் எனும் படுகுழியில் இருக்கிறவரையில் தென்னாடு ஈடேற முடியாது!

"கடந்த ஏழு ஆண்டுகளாக என்ன கண்டோம்? எதை இவர்களால் சாதிக்க முடிந்தது? இன்று நாட்டில் நிலவும் கோரக் காட்சிகள்தானா காங்கிரஸ் தியாகிகள் காண விரும்பிய சுயராஜ்யக் காட்சி!

"காங்கிரஸ் முதலாளிகளின் முகாமாய், பணக்காரர்களின் பாசறையாக மாறிவிட்டது. தனிப்பட்ட ஒரு முதலாளிக்குச் சொந்தமான டாட்டா இரும்புத் தொழிற்சாலைக்கு 10 கோடி ரூபாயை டில்லி அரசாங்கம் வட்டியில்லாக் கடனாக தந்திருக்கிறது. மூன்று நாளைக்கு முன்னால்! நியாயமா இது? இந்தச் செய்கையை, 'காங்கிரஸ் முதலாளிகளை ஆதரிக்கிறது; ஏழைகளைக் கண்ணெடுத்தும் பார்க்க மறுக்கிறது,' என்று சொல்லாது, வேறு எப்படி சொல்ல முடியும்? எனவேதான், நாங்கள் சொல்கிறோம் — இன்றுள்ள காங்கிரஸ் ஆட்சியாளரால், ஏழைகளை வாழ்விக்க முடியாது — என்று!"

இவ்வாறு பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள் கொடாச்சேரியில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் குறிப்பிட்டுவிட்டு, தென்னாட்டு அரசாங்கத்திடம் வழங்கப்படும் அதிகாரம் இல்லை என்பதையும், அந்த அதிகாரங்களைக் குவித்து வைத்துக் கொண்டிருக்கிற டில்லி அரசாங்கம்

(4-ம் பக்கம் பார்க்க)

★

கொடாச்சேரி, செப். 2—

கொடாச்சேரியில் 2—9—54 அன்று காந்தி பூங்காவில் கொடாச்சேரி, அபிவிருத்தீஸ்வரம் ஆகிய ஊர் தி. மு. கழகங்களின் சார்பாக தஞ்சை மாவட்ட தி. மு. கழக செயலாளர் தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் தலைமையில் ஓர் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் சி. கிருட்டிண மூர்த்தி, என். எம். வைத்தியலிங்கம், அ. பொன்னம்பலனார் ஆகியோர் பேசிய பின் தி. மு. கழக பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் நீண்டதோர் உரையாற்றினார்.

பொதுச் செயலாளருக்கு அபிவிருத்தீஸ்வரம் பஞ்சாயத்து போர்டார், கொடாச்சேரி பஞ்சாயத்து போர்டு தலைவர், இளைஞர் பல மன்றங்கள், கழகங்கள் சார்பில் வரவேற்பிதழ்கள் வாசித்தளிக்கப்பட்டன.

கூட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள், பொதுச் செயலாளரின் கருத்துரைகளைக் கேட்க கூடியிருந்தனர்.

'காம்ரேட்' என்று அழைக்கலாம்!

★

"பாராளுமன்ற உறுப்பினர்களை, 'காம்ரேட்' என்று அழைப்பது சரியானது," என்று இந்திய மேல்சபையில், உபதலைவர் கூறினார்.

சர்க்கார் பிரரேபணைகள் நிராகரிப்பு

கிரிமினல் சட்ட திருத்த மசோதா பற்றி பரிசீலனைக் குழு அறிக்கை

போலீசாரிடம் அதிகாரத்தைக் குவிக்க மறுப்பு!

கட்டுப்பாடுடன் அடக்குமுறைக்கு ஆதரவு

மக்களின் பேச்சு, எழுத்து உரிமைகளைப் பறிக்க சதி!

அவதூறு என்று எதிர்க்கட்சியினர் சிறையில் அடைக்கப்படுவர்

நேரு சர்க்கார், ஏகாதிபத்திய மனப்பான்மையுடன், நாட்டிலே யாரும் சர்க்கார் அதிகாரிகளைப் பற்றியோ, பதவியில் இருக்கும் அமைச்சர்களைப் பற்றியோ, பேசவோ, எழுதவோ கூடாது என்று தடுக்கும் முறையில் கிரிமினல் சட்டத்திற்கு திருத்த மசோதா ஒன்றைத் தயார் செய்துள்ளனர்.

'பேசவும், எழுதவும் சுதந்திரம் தந்திருக்கிறோம்,' என்று ஒரு பக்கம் கோஷம் இட்டுக் கொண்டு, அதே நேரத்தில் அவதூறு என்ற பெயரால் சர்க்காரின் போக்கை எதிர்ப்பவர்களையெல்லாம் சிறையில் தள்ள டில்லி அரசு முயன்று வருகிறது. அதற்காவன செய்யும் மசோதாதான் கிரிமினல் சட்டத் திருத்த மசோதா.

இந்த மசோதாவைப் பரிசீலனை செய்த செலக்ட் கமிட்டியினர், சர்க்காரின் ஆதிக்க மனப்பான்மையை எதிர்க்கவில்லை என்றாலும், சர்க்காரின் போக்கிலே காணப்படும் குற்றங்களை எடுத்துச் சொல்வோர்மீது அவதூறு என்ற போர்வையில் வழக்குத் தொடர, போலீசார் கையில் ஏராளமான அதிகாரத்தைக் குவிப்பதைத் தடை செய்திருக்கின்றனர்!

மசோதாவைப் பரிசீலனை செய்த குழுவினர், பத்திரிகை கமிஷனின் கருத்தைத் தங்கள் மனதில் கொண்டு, அறிக்கை தயாரித்திருக்கிறார்கள்.

பதினைந்து உறுப்பினர்கள் எதிர்ப்புக் குறிப்புகள் எழுதியிருக்கின்றனர்.

மக்கள் சபையில் விவாதத்திற்கு வைக்கப்பட்டிருக்கும் தனிக் குழுவின் அறிக்கையில் மசோதாவில் பல மாற்றங்கள் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதாம்.

கிரிமினல் சட்டத் திருத்த மசோதாவில் உள்நாட்டு அமைச்சரின் இரண்டு முக்கிய சிபார்சுகளை, பாராளுமன்றத்தின் இரு சபைகளின் கூட்டு தனிக் குழுவினர் நிராகரித்துவிட்டனர்!

தனிக் குழுவினர் இரண்டு முக்கிய சிபார்சுகளையும் சேர்த்திருக்கின்றனர்.

ஜனாதிபதி, கவர்னர், ராஜப்பிரமுகர், மந்திரி அல்லது சர்க்கார் ஊழியர் மீது அவதூறு உண்டாக்கும் குற்றத்திற்கும் போலீசாரே நடவடிக்கை எடுக்கக் கூடாதென்றும், போலீசார் பதிவு செய்யும் வாக்குமூலங்களை அனுசரணை சாட்சியங்களாகப் பயன்படுத்தக் கூடாதென்றும், தனிக் குழு சிபார்சு செய்திருக்கிறது.

இந்த திருத்த மசோதாவில் உப ஜனாதிபதியின் பெயரையும் சேர்க்கவேண்டுமென்று சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

அவதூறுக்கு உள்ளானவர் தவிர, மற்றொரு சபேச்சையான அதிகாரி, இவ்வழக்குகளில், சட்டத்தை இயக்கச் செய்யவேண்டுமென்று குழு கருதுகிறது.

இவ்வித வழக்குகளில், செஷன்ஸ் கோர்ட்டில், பப்ளிக் பிராசிகியூட்டர்களுக்குத்தான் பிராது தாக்கல் செய்யும் அதிகாரம் இருக்கவேண்டுமென்றும், பிரதிவாதியை விசாரணைக்கு 'கமிட்' செய்யாமலேயே செஷன்ஸ் கோர்ட் இந்த வழக்கை எடுத்துக்கொள்ளலாம் என்றும், சாதாரண வழக்கு முறையை இதற்கும் பின்பற்றலாம் என்றும், சம்பந்தப்பட்டவரின் சம்மதம் இன்றி தாக்கல் செய்ய பப்ளிக் பிராசிகியூட்டருக்கு அதிகாரம் கூடாதென்றும், பிரதிவாதி, சரி செய்ததாகக் கூறப்படும் குற்றத்தைப் பற்றி அவருக்கு கோர்ட்டில் தெரிவிப்பதற்கு நியாயமான அளவு தகவல்கள் பிராதில் காணப்பட வேண்டுமென்றும், குற்றம் செய்யப்பட்டதாகச் சொல்லப்படும் தேதியிலிருந்து ஆறு மாதத்திற்குள் வழக்கு கொண்டுவரப்பட வேண்டும் என்றும் தனிக்குழுவின் அறிக்கை கூறுகிறது.

முக்கிய நகரம் பாழாகிறது!

வெள்ளம் விளைவிக்கும் சேதம்

கௌஹாத்தி, செப் 3—

வடகிழக்கு இந்தியாவில் முக்கிய தேயிலைத் தோட்ட நகரமான திப்ருகார், வெள்ளத்தால் நாசமடைந்து வருகிறதாம்!

பிரம்மபுத்திராவின் 1,500 அடி நீளமுள்ள கற்பாறை கட்டப்பட்டுள்ளது, உடைப்பு எடுத்துக் கொண்டுமென்று தெரிகிறது. உடைப்பின் மூலம், அடுத்த சில மணி நேரத்தில் திப்ருகார் நகர முழுமையும் வெள்ளத்தால் அடித்துக் கொண்டு போகப்படுமென்று தெரிகிறது.

5000-த்திற்கு மேற்பட்ட மக்களை கரையைப் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளனர்.

மின்சாரக் கம்பிகள் துண்டிக்கப்பட்டிருப்பதால் ஏற்கனவே நகரின் பகுதிகள் இருட்டில் மூழ்கி இருக்கின்றன என்று தெரிகிறது.

இந்திய விமானப் படையைச் சேர்ந்த விமானங்கள், பீகார், நாகா, மீரூர் போன்ற பகுதிகளில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 422 மணங்கு அரிசியை 650 மூட்டைகளாக கீழே போட்டனர் என்று தெரிகிறது.

பீகாரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சென்னை சர்க்கார் 25 டன் அரிசியை உதவிப் பொருளாக அனுப்பியிருக்கின்றார்கள் என்று தெரிகிறது.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 4—9—54 சனி

அவர்கள் குறிக்கோள்!

‘இந்தியா எனும் ‘பாரத்,’ ஒரே தேசம்!

‘இதில் வாழ்பவர், இந்தியர் என்ற ஒரே இனத்தினர்!

“இதன் தேசிய மொழி இந்தி!”

இந்த மூன்று அடிப்படையின்மேல்தான், இன்றைய காங்கிரஸ் இயங்குகிறது!

இந்தியாவில் பல்வேறு இனங்களும், முற்றிலும் வெவ்வேறான குழு மொழிகளும் இருக்கின்றன என்பது, அந்தத் தேசிய இயக்கத்தை நடத்தும் தலைவர்களுக்குத் தெரியாததல்ல!

இந்திய உப கண்டத்தில் உறைந்து கிடக்கும் ஒன்றுக்கு ஒன்று நேர் எதிரான கலாச்சாரங்கள், அவர்களுக்கும் புதிய விஷயமல்ல!

வெள்ளையன் வரும்முன் அந்தந்த மொழி, கலாச்சாரம் உள்ள நாடுகள் தனித்து வாழ்ந்தனவென்பதும், கால மாறுபாட்டினால் ஒன்றுபட்ட கலாச்சாரமோ, இன ஒற்றுமையோ ஏற்படவில்லை என்பதும் அவர்களுக்குத் தெரியும்!

காஷ்மீரியும், பெங்காலியும், குஜராத்தியும், மராட்டியனும், திராவிடனும், இன்ன பிற வகுப்பினரும் இன்றும் தனித்தே வாழ்கின்றனர் என்பதும் எல்லோரும் அறிந்த விஷயம்.

இருந்தும், பிரிட்டனிடமிருந்து சுயராச்சியத்தைப் பெற்ற தேசியத் தோழர்கள், இந்திய உபகண்டம் ஒரே நாடு என்றும், அதில் இந்தி பொதுமொழியாக வேண்டுமென்றும், இந்திய இனம் என்ற புதிய இனம் ஒன்று உற்பத்தியாக வேண்டுமென்றும் முடிவு செய்தனர்.

அந்த அடிப்படையில்தான் டெல்லியில் கூடிய அரசியல் நிர்ணய சபையினர் அரசியலமைப்பைத் தீட்டினர். தேசியத் தலைவர்கள் எல்லோரும் அந்த அரசியலமைப்பை அமுலுக்குக் கொண்டுவந்து, இந்திய இனத்தை உற்பத்தி செய்ய உறுதி எடுத்தனர்.

இந்திய உபகண்டம் ஒரே நாடு—இல்லை, இதை ஒரு குடைக்கீழ் கொண்டு வருவது தான் தமது இலட்சியம் என்று முடிவு செய்த காரணத்தால்தான், அன்றிலிருந்து இன்றுவரை, நாடு பூராவும் சுற்றி, இந்திய ஒற்றுமைக்குக் கீதம் பாடி வருகின்றனர்!

இந்திக்கு ஆதிக்கம் தேடுகின்றனர்!

இந்திய இனம் என்ற ஒன்றுதான் இன்றிருக்கிறது; மற்ற இனங்களெல்லாம் ஒன்றோடொன்று கலந்து, உருத் தெரியாமல் போய்விட்டன என்ற புதிய ஆராய்ச்சி வெளியிடுகின்றனர்!

இதற்கு ஆதாரமாக ஆரியரின் வேதத்தையும், ஆரியர் மன்னர்களாக உருவாக்கிய இந்து மதத்தையும் துணைக்கு அழைக்கின்றனர்!

எல்லைக் கோடுகள் இந்திய உபகண்டத்தில் கிடையாது என்பதை திரும்ப, திரும்ப கூறுகின்றனர்!

காந்தியின் தியாகத்தையும், சிதம்பரம் பிள்ளையின் பரிதாப முடிவையும் கூறி, இந்திய ஒற்றுமை பேசுகின்றனர்!

அதே நேரத்தில், இந்த நாட்டிலிருக்கும் பல்வேறு மொழிகளும், கலாச்சாரங்களும் வளரட்டும்; ஆனால் அவைகள் இந்திய இனம், கலாச்சாரம், மொழி இவைகள் வளருவதைத் தடுக்கக் கூடாது—என்றும் உபதேசம் செய்வர்!

தமிழ் வளரலாம்; ஆனால், இந்தியின் ஆதிக்கத்தை ஒத்துக்கொண்டு வளர வேண்டும்!

தமிழ்ப் பண்பும், திராவிட கலாச்சாரமும் வளரலாம்; ஆனால், இந்திய இனத்தின் தலைமையின்கீழ் வளர வேண்டும்!

இதிலே வேடிக்கை என்னவென்றால், இந்திய இனத்தை உற்பத்தி செய்ய திட்டமிடுபவர்கள், டெல்லியில் அதிகாரம் செலுத்துபவர்கள்!

இந்திய உப கண்டத்து விடுதலைப் போராட்டத்திலிருந்தே, வடநாட்டிலிருந்தவர்களே தலைமைப் பீடத்திலிருந்த காரணத்தால், வடநாட்டு நாகரீகமும், மொழியுமே இந்திய உப கண்டத்தின் பொதுவான நாகரீகமும், மொழியுமாகிவிட்டது அவர்கள் கண்களுக்கு!

இந்திய உப கண்டத்தின் பெரும் அளவு பூபாகம் வடநாடு; பெருவாரியான மக்கள் பேசும் குழு மொழி இந்தி; ஆகவே இந்தியா ஒரே தேசமாக வேண்டுமானால், வட நாட்டு மொழி, கலாச்சாரம், பண்பு எல்லாம் தான், இயற்கையாக இந்திய இன உற்பத்தியின் அடிப்படையாக வேண்டும் என்று முடிவு கட்டிவிட்டனர், தேசியத் தலைவர்கள்!

அந்தத் தலைவர்களுக்குக் காவடி தூக்கி வந்த திராவிட காங்கிரஸ் தலைவர்களும், பக்தியோடு அவர்களைப் பின்பற்றிவிட்டனர்!

நேருவோ, கட்ஜுவோ, இந்திய இனம் என்று கூறும் போது, தங்களுடைய சொந்த கலாச்சாரத்தையும், மொழியையும் அடக்கிய மக்களையே சேர்த்துக் கூறுகின்றனர் என்பது நமது கவனத்திலிருக்க வேண்டிய விஷயம்!

ஆண்டான், அடிமைகளைப் பார்த்து, ‘நன்றாகச் சாப்பிடுங்கள்; உங்கள் மனைவி மக்களோடு கூடிக் குலவுங்கள்; ஆனால், முடிவில், பொழுது புலரும் முன் வயலுக்கு வந்து சேருங்கள், ஏற்றம் பிடிக்க!” என்று கூறுவதுபோல, “தமிழைப் பற்றி பேசுங்கள்; திராவிட இனப் பெருமை, கலாச்சார வளர்ச்சியைப் பற்றியெல்லாம் தெரிந்துகொள்ளுங்கள்; ஆனால், முடிவில், இந்திய இனம், இந்தி மொழி, இந்திய கலாச்சாரம் அமையப் பாடுபடுங்கள்!” என்று கூறுகின்றனர், இன்றைய காங்கிரஸ் தலைவர்கள்!

இந்த அடிப்படை உண்மையை, எந்த காங்கிரஸ் தலைவர் பேச்சிலும் கேட்கலாம்!

“தமிழ் நாடு பெருமை வாய்ந்தது என்பது உங்களுக்குத் தெரியும்; இன்று, அது இருக்கும் நிலையோ பரிதாபகரமானது; இதை மாற்றத்தான் ஐந்தாண்டுத் திட்டத்தை ஆரம்பித்திருக்கிறோம்; எல்லோரும் இதில் பங்கெடுத்துக் கொள்ளுங்கள்; நம் நாட்டின் செல்வம் வளரும்; பாரதத்தின் பெருமை ஓங்கும்!” — என்று, தமிழ் நாட்டின் பெருமையில் ஆரம்பித்து, தமிழ் நாட்டிற்குக் காலணாவுக்குக் கூட பயனற்ற ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி கூறி, முடிவில், பாரதத்தின் பெருமையைக் கூறி முடிப்பர்!

மொழியைப் பற்றி ஆரம்பித்தால், “தமிழ் நமது தாய் மொழி; அதைப் படிக்க வேண்டியது அவசியம்! ஆங்கிலம், அகில உலக மொழி; ஆகவே, அதன் அறிவும் தேவை! இந்தியோ நமது ராஜ்ய மொழி; தேசிய மொழி; இதைக் கட்டாயம் எல்லோரும் கற்றுக் கொள்ள வேண்டும்!”—என்று பல்லவி பாடுவர்!

இப்படி காங்கிரசின் அடிப்படைக் கொள்கை, இந்திய இனம் உண்டாக்குவதிலும், இந்தியை நாடெங்கும் பரவச் செய்வதிலும் படிந்திருக்கிறது.

இந்த எண்ணத்தினால் தான், எந்த மொழியும், கலாச்சாரமும், இந்திய ஒற்றுமையை ஊறு செய்யுமளவு வளரக்கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர்.

சென்ற திங்களில் பம்பாயில் மராட்டிய மாகாணப் பிரச்னையைப் பற்றிப் பேசிய நேரு பண்டிதர், இந்திய இன உற்பத்திக்கு ஊறு செய்பவர்களை மிகக் கடுமையான வாசகங்களினால் கண்டித்தார்,

“ஒரு புதிய இனம் அடங்கிய தேசத்தை உற்பத்தி செய்து கொண்டிருக்கும் போது, இந்த சிறு இனங்களின் கூக்குரலை நான் சகித்துக் கொண்டிருக்க மாட்டேன்,” என்றார்.

ஆனால், அதே நேரத்தில், ஆண்டான், அடிமைக்குக் கூறுவது போல, சிறு இனங்கள் இந்திய இன எல்லைக்குள் வளருவதை தான் ஆட்சேபிக்கவில்லை என்றார்.

இந்தப் பல்லவியைத்தான், அத்தனை காங்கிரஸ்காரர்களும் பாடுகின்றனர்!

“சித்தூர் எல்லைக் கிளர்ச்சியா? எதற்கு இந்த எல்லைத் தொல்லைகள்? எல்லோரும் இந்திய குடிமக்கள்தானே!”

‘திரு—கொச்சி போராட்டமா? பொறுத்திருங்கள்; மாநில எல்லை திருத்த குழு நியமித்திருக்கிறோம்!”

என்று, இந்தப் போராட்டங்களில் அடங்கியிருக்கும், மொழி, கலாச்சார உணர்ச்சியைக் கவனிக்க மறுக்கின்றனர்!

சமீபத்தில் மதுரையில் பேசிய காமராசர், ‘தமிழனுக்கும், தமிழுக்கும், தமிழ் நாட்டிற்கும் என்னால் இயன்ற அளவு சேவை செய்ய உறுதி அளிக்கிறேன்!”—என்றாராம்!

அறிவுக்குத் திரையிட்டு, அரசியலில் குறைந்தோர்களும், காங்கிரசின் கொள்கையை உணராத அவசரக்காரர்களும், ‘பலே! முதலமைச்சரின் தமிழ் ப[illegible]!” என்று ஆனந்தக் கூத்தாடினர்!

அவர்களுக்குப் புத்தி புகட்ட நினைத்தாரோ என்னவோ, மறுநாள் பேசிய முதலமைச்சர், “இந்த நாட்டை மொழிவாரியாகவும், வகுப்புவாரியாகவும் பிரிக்க முயற்சிப்பது இந்திய தேசத்தின் ஒற்றுமையைக் குலைப்பதாகும்; அப்படிப்பட்ட ஆபத்து நேராமல் பார்த்துக் கொள்ள வேண்டியது மக்கள் கடமை!” என்று கூறியிருக்கிறார்.

தமிழுக்கும், தமிழ் நாட்டிற்கும் அவர் செய்யும் சேவை, இந்திய ஒற்றுமையைக் குலைக்காமலிருக்குமாம்! அதுதான் அவரால் இயன்றது!

இந்த எண்ணம், முதலமைச்சருக்கு மாத்திரமல்ல; எல்லாக் காங்கிரஸ்காரர்களுக்கும் உள்ளது; ஏனெனில், அதுதான் அவர்கள் சார்ந்திருக்கும் கட்சியின் கொள்கை!

ஒன்றுபட்ட இந்தியாவை உற்பத்தி செய்து, அதில் இந்திய இனத்தை உண்டாக்கி, இந்தியை அரியாசனம் ஏற்றுவதுதான் அவர்கள் குறிக்கோள்!

நாமோ, அதற்கு நேர் எதிரான நிலையில் நிற்பவர்கள்!

இந்தியாவை இன, மொழி, கலாச்சாரத்திற்கு ஏற்பப் பிரித்து, திராவிடக் கூட்டாட்சி அமைக்கக் கங்கணம் கட்டியவர்கள்!

வடநாட்டு ஏகாதிபத்தியத்தையும், அதற்குக் காரணமான இந்தியையும் இந்த நாட்டை விட்டு விரட்டுவது அவசியம் என்று உணர்ந்து செயலாற்றுபவர்கள்!

நமக்கும் அவர்களுக்குமிருக்கும் இந்த அடிப்படை வேற்றுமையை மறைக்க, அவ்வப்போது, மயக்க மொழி பேசுவர், தேசியத் தோழர்கள்!

இதிலே தவறினால், அடுத்த கட்டம், நமது இனம், மொழி, கலாச்சாரம், எல்லாம், வேகமாக டெல்லியின் ஆதிபத்தியத்திடம் ஒப்படைக்கப்படும்!

இதை மனதில் கொண்டு கவனிக்க வேண்டும், தேசியத் தோழர்களின் சொற்களையும், செயல்களையும்!

★★★ கண்டதும் கேட்டதும் ★★★

நிராசை உபதேசம்!

‘திருப்பதி வெங்கடாஜலபதிக்கு ஜே!’ என்ற கோஷங்கள் அடிக்கடி கேட்கும் திருப்பதியில், ஆந்திர சர்க்கார், ஒரு பல்கலைக் கழகத்தை உருவாக்கியிருக்கின்றனர்.

ஆந்திராவின் முதுபெரும் கிழவர் என்று அழைக்கப்படும் முதலமைச்சர் பிரகாசம், பல்கலைக் கழகத்தை ஆரம்பித்து வைத்திருக்கிறார்.

‘வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகம்’ என்ற பெயரில் இயங்கும் இப்பல்கலைக் கழகம் ஆந்திர நாட்டு மாணவர்களின் எதிர்காலத்தை உருவாக்குவதில் சிறந்த முறையில் பணியாற்றும் என்று எதிர்பார்க்கலாம்

பல்கலைக் கழக ஆரம்ப விழாவில் பேசியவர்கள், பல்கலைக் கழகங்களின் பெருமைகளை எடுத்துக் காட்டி, உலகில் மற்ற நாடுகளில் புகழுடன் பணி செய்யும் பல்கலைக் கழகங்களைப்போல வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகமும் விளங்க வேண்டும் என்று பேசியிருக்கிறார்கள்.

சிலர், சென்னை பல்கலைக் கழகத்திலிருந்து பிரிந்து சென்ற கல்லூரிகள், வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகத்தில், சென்னை பல்கலைக் கழகத்தின் நல்ல பண்புகளை பரவச் செய்யுமென்று நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்கள்.

ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் போன்ற பல்கலைக் கழகங்கள் பற்றி பலர் எடுத்துக் காட்டி, வெங்கடேசரின் முன்னிலையிலே துவங்கப்படும் பல்கலைக் கழகமும் புகழுடைய வேண்டுமென வாழ்த்தியிருக்கிறார்கள்.

வெங்கடேசரின் [illegible]திலே நடைபெறப் போகும் இப்பல்கலைக் கழகம், இந்திய உபகண்டத்திலே ஒரு புது முறையைப் புகுத்திவிட்டது.

மற்ற இடங்களில் உள்ளதைப் போன்று இராஜ்யங்களின் கவர்னர்களே வேந்தர்களாக இருப்பதை மாற்றி, ஆந்திர இராஜ்ய தலைமை நீதிபதியை வேந்தராக நியமித்திருக்கிறார்கள்.

பல்கலைக் கழக வேந்தரான நீதிபதி சுப்பாராவ் அவர்களும், துவக்க விழாவில பேசும்போது, ‘வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகம், நாட்டிலே பல நூற்றாண்டுகளாக நடைமுறையில் இருக்கும் பக்தியைப் பரப்ப முயற்சிக்கும்,’ என்று ஜாடையாகக் கூறியிருக்கிறார்.

‘வடமொழி இலக்கியம், இந்திய வேதாந்தம், இந்து மதம், ஆயுர்வேதம் இந்த நான்கு பிரிவுகளையும் வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகம் வளர்க்கப் பாடுபடும்,’ என்று நீதிபதி சுப்பாராவ் பேசியிருக்கிறார்.

ஓரியண்டல் கல்வியை வளர்ப்போம் என்று கூறுவதால், அங்கே விஞ்ஞானப் படிப்பு ஏதும் இராது என்று முடிவு கட்ட வேண்டியது இல்லை; ஏனெனில், அங்கே விஞ்ஞானக் கல்விக்கு அதிக மதிப்பு கொடுக்கிறார்கள் என்று தெரிகிறது.

நீதிபதி சுப்பாராவ், ‘மதத்தை வளர்க்கப் பாடுபடுவோம்,’ என்று பேசியதற்கு உள்ளர்த்தம் ஒன்றும் இருக்கிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

தூத்துக்குடி சதி வழக்கு விசாரணை

வக்கீல் சேஷய்யங்கார் சாட்சியம்

வழக்கறிஞர்கள் குறுக்கு விசாரணை

25—8—54ல், நெல்லை அடிஷனல் செஷன்ஸ் நீதிபதி திரு. ராதாகிருஷ்ண முதலியார் முன்னிலையில், மீண்டும், சாட்சிகள் விசாரணை ஆரம்பமாயிற்று. சர்க்கார் தரப்பில் ஜனார்த்தனம் விசாரிக்கப்பட்டார்.

பிறகு எதிரிகள் சார்பில், பி. ஏ. தங்கசாமி நாடார் சாட்சியை குறுக்கு விசாரணை செய்தபொழுது சாட்சி கூறியதாவது:—

"கூட்டத்தினர், கம்பு கொண்டு வந்தார்கள் என்று போலீஸ் விசாரணையின்போது கூறியதாக எனக்கு ஞாபகம் இருக்கிறது."

எம். செல்லையப்பா பிள்ளையின் குறுக்கு விசாரணையின்போது சாட்சி கூறியதாவது:—

"சர்க்கிள் இன்ஸ்பெக்டர் விசாரிப்பதற்கு முன், படம் உடைந்த விஷயமாக நான் வேறு ஒருவரிடமும் சொல்லவில்லை; 'விடுதலை' நான் போர்டையும் இழுத்ததாக இன்ஸ்பெக்டரிடம் சொன்னதுதான் ஞாபகம்."

★

அடுத்து சுப்பிரமணியபோத்தி சர்க்கார் தரப்பில் சாட்சியாக விசாரிக்கப்பட்டார்.

எதிரிகள் சார்பாக சாட்சியை பி. ஏ. தங்கசாமி நாடார் குறுக்கு விசாரணை செய்தபொழுது சாட்சி கூறியதாவது:—

"கடையில் பணம் வாங்குவது நான்தான்; அன்று காலை 8 மணிக்கு ஓட்டலுக்குப் போனேன்; சம்பவம் நடந்த தினத்தன்று 10 மணிவரை அங்கு தான் இருந்தேன்; சம்பவத்துக்கு முன்னால், வேறு கூட்டம் வடக்கிலிருந்து தெற்கே வரவில்லை; எனது கடை இருக்கும் தெரு கிழரத வீதி."

பிறகு, வெங்கடேஸ்வரய்யர், சர்க்கார் தரப்பில் சாட்சியாக விசாரணை செய்யப்பட்டார்.

எதிரிகள் சார்பாக பி. ஏ. தங்கசாமி நாடார் குறுக்கு விசாரணை செய்தபொழுது சாட்சி கூறியதாவது:—

"என் கடைக்கு முன்னால் போவது, கீழ்மேல் மாவையன் கோட்டை ரோடு; எட்டையாபுரம் ரோடிலிருந்து, ஒரு சந்து, என் கடைக்கு எதிரே வருகிறது; அந்தத் தெருவுக்குப் பெயர் கிடையாது; எட்டையாபுரம் ரோடில், வசந்தன் வந்து சந்திக்கின்றன; எட்டையாபுரம் ரோட்டிலிருந்துதான் கூட்டம் வந்ததே யொழிய, ரயில்வே ஸ்டேசனிலிருந்து வந்ததாக என்னால் நிச்சயமாகச் சொல்ல முடியாது; மேலூர் ஸ்டேசனுக்கு மேல் பக்கமிருப்பதுதான் 3-வது கேட்டு; அந்த கேட் வழியாகத்தான் எட்டையாபுரம் ரோடு வருகிறது; வெளியிலிருந்தும், உள்ளிருந்தும் அந்த ரோடு வழியாக ஜனங்கள் வரலாம்."

பி. எஸ். கந்தையா பிள்ளை எதிரிகள் சார்பாக குறுக்கு விசாரணை செய்தபோது சாட்சி கூறியதாவது:—

"சம்பவத்துக்கு 4 நாட்களுக்குப் பிறகுதான் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் கிருஷ்ணய்யர் என்னை விசாரித்தார்; என்னை யாரும் கூப்பிடவில்லை; இது விஷயமாக நான் மனு ஒன்றும் கொடுக்கவில்லை; இதை உடைந்த கம்புகள், எப்படிப் போலீசுக்குப் போய்ச் சேர்ந்தது என்று தெரியாது; கிருஷ்ணய்யர் கேட்ட பிறகு தான், 'இது, என் கம்பு,' என்று கூறினேன்."

★

பின்னர், சர்க்கார் தரப்பு சாட்சியாக அருணாசலக் கோனார் விசாரிக்கப்பட்டார்.

எதிரிகள் சார்பாக பி. ஏ. தங்கசாமி நாடார் குறுக்கு விசாரணை செய்தபொழுது சாட்சி கூறியதாவது:—

"நான் வேலை பார்க்கும் ஸ்டோருக்கும், ஓட்டலுக்கும் 1 பர்லாங்கு இருக்கும்; கூட்டத்தில் 20 வயது பையன்கள் இருந்தார்கள்; எதிரிகளை பையன்கள் என்று சொல்ல முடியாது; ஓட்டல் முன்னால் பையன்கள் வந்தார்களா என்று ஞாபகமில்லை; கீழ்க்கோர்ட்டில், பையன்களும் இருந்தார்கள் என்று சொன்னது ஞாபகமில்லை."

★

26—8—'54 விசாரணை

26—8—54-ல், சர்க்கார் தரப்பு சார்பில், வக்கீல் சேஷய்யங்கார் சாட்சியாக விசாரிக்கப்பட்டார்.

எதிரிகள் சார்பாக பி. எஸ். கந்தையாபிள்ளை குறுக்கு விசாரணை செய்தபொழுது சாட்சி கூறியதாவது:—

"எனக்கு கிரிமினல் கோர்ட்டில் நிறைய அனுபவம் உண்டு; சிவிலிலும், கிரிமினலிலும் எனக்கு சம அனுபவம் உண்டு; எனக்கு கிரிமினல் சட்டங்களெல்லாம் நன்றாகத் தெரியும்; என் வீட்டில் நடந்தவைகளையெல்லாம் நான் எழுதிக் கொடுத்திருக்கிறேன்; போலீசார் கேட்டார்கள், அதனால் எழுதிக் கொடுத்தேன்; அந்த மனு இப்பொழுது எங்கு போயிருக்குமென்று எனக்குத் தெரியாது; நான், மதுரை கலெக்டருக்கும், தூத்துக்குடி சப்-கலெக்டருக்கும் எழுதிக் கொடுத்தேன்; சம்பவ தினம் 1, 2 நாட்களுக்குப் பிறகு எழுதிக் கொடுத்தேன்; விசாரணையில், இப்பொழுது சொன்னதைத்தான் எழுதிக் கொடுத்தேன்; எழுதிக் கொடுத்ததற்கு நான் நகல் வைத்துக் கொள்ளவில்லை; இன்ஸ்பெக்டர் கிருஷ்ணய்யர் எனக்கு 7, 8 வருடமாகத் தெரியும்; அவரிடம் எனக்கு பழக்கமே கிடையாது; அவர் எனக்கு சிநேகிதர் இல்லை; வழக்கு ஆரம்பமான காலம் முதல் இன்றுவரை கிருஷ்ணய்யர் புதுக்கிராமத்தில்தான் குடியிருக்கிறார்; டாக்டர் சேஷாத்திரி என்னுடைய சொந்தக்காரர்; சேஷாத்திரியும், கிருஷ்ணய்யரும் நண்பர்கள் என்பது எனக்குத் தெரியாது; சேஷாத்திரி புதுக்கிராமத்தில் தான் குடியிருக்கிறார்; 15 நாட்களுக்குப் பிறகு நான் அடையாளம் காட்டும் பரீட்சைக்குப் போனேன்; நான் போலீஸ் ஸ்டேசனுக்குப் போகவில்லை; போலீஸ் ஸ்டேசன் கட்டிடத்தால், அதாவது தூத்துக்குடியில் ஜெயில் இருக்கிறது; கிருஷ்ணய்யர், சம்பவம் நடந்த 2-தினங்களுக்குப் பிறகு, என்னை, என் வீட்டில் விசாரணை செய்தார்; சம்பவத்துக்கு 1 மாதம் 21 நாள் கழித்துத்தான் அடையாளம் காட்டினேன்; இதற்கிடையில் நான் கிருஷ்ணய்யரை சந்திக்கவில்லை; எதிரி சீனிவாசனை நான் பார்த்திருக்கிறேன்; அதிக மீசையுள்ள இதே எதிரியைத்தான் நான் முன்பும் அடையாளம் காட்டியிருக்கிறேன்; நான் அடையாளம் காட்டிய 45-வது எதிரிக்குத்தான் அதிக மீசை இருக்கிறது; நான் அடையாளம் காட்டிய எதிரிக்கும் எனக்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது; மீசையை வைத்துத்தான் நான் இவரை அடையாளம் காட்டவில்லை; எதிரி, கைக்கிலே வைத்துக் கொண்டு, 'ராஜாஜி ஒழிக; கல்லெறியுங்கள்,' என்று சொன்னார்; இப்படித்தான், நான், இன்ஸ்பெக்டரிடம் கூறினேன்; எனக்கு எதிரி முன்பே தெரியுமென்று சொல்லவில்லை; கல்லெறி விழும்பொழுது, நான், மேலை பக்கம் நின்றுகொண்டிருந்தேன்; கூட்டம் வரும்பொழுது அப்படியே நின்று கொண்டிருந்தேன்; கல் விழும் பொழுது தலைச் சாய்த்துக் கொண்டேன்; 4, 5 கற்கள் வீட்டுக்குள் விழுந்தது; 2 கெஜ தூரத்திலிருந்து கல்லெறிந்தார்கள்; வீட்டுக் கம்பிகள் 4-லிருந்து 5 அங்குலம் தூரமிருக்கும்;

(4-ம் பக்கம் பார்க்க)

ரஷ்யா முன்வர வேண்டும்!

ஆயுதக் குறைப்புப் பற்றி அட்லி யோசனை!

மாலங்கோவுக்கு சீனத் தலைவர் மூலம் செய்தி

ஹாங்காங், செப் 5—

"உலக நாடுகள் ஆயுதக் குறைப்பு செய்ய வேண்டுமென்றால், சோவியத் ரஷ்யா இதற்காக முன்வந்து, தானே முதலில் இதைச் செய்கையில் காட்டுவது பொருத்தமானதாகும்," என்று மாலங்கோவிடம் கூறுமாறு சீனக் குடியரசின் தலைவர் மா-சே-துங்கிடம், பிரிட்டனின் முன்னாள் அமைச்சர் அட்லி தெரிவித்துள்ளாராம்.

பத்திரிகை நிருபர்களிடம், அட்லி பேசுகையில், பார்மோசா, சீனர்களுக்கே சொந்தமானது என்று தான் கருதுவதாகக் கூறினார்.

ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பார்மோசா நடுநிலைமைப் பிரதேசமாக இருப்பது சிறந்தது என்று அவர் கருதுகிறார்.

சீன சர்க்கார், ஜனநாயக இல்லாத முறையில் இயங்குகிறது என்றும், மக்களின் நம்பிக்கையைப் பெற்றிருக்கிறது என்றும், ஆனால், அங்கே, 'எல்லாம் சரியாக இருக்கிறது,' என்று யாரும் வீண் பெருமை கொள்ளவில்லை என்று அட்லி கூறினார்.

மறைவு

தங்கம்மாசத்திரம் தி. மு. கழக முன்னாள் கிளைச் செயலாளரான தோழர் கே. டி. மஜீத் அவர்கள் சில நாட்களாக நோய்வாய்ப்பட்டு 29—8—54 காலை இயற்கை எய்தினார் என்பதை அறிந்து மிகவும் வருந்துகிறோம்.

அன்னாரது குடும்பத்தாருக்கு சென்னை 34-வது வட்ட தி. மு. கழகத்தினர் தங்கள் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

மூட நம்பிக்கையினால் மாணவ சமுதாயம் பாழாகிறது!

தோழர் க. அன்பழகன் கருத்துரை

சென்னை இராயபுரம், இராமானுஜம் பிள்ளை உயர்தர ஆரம்பப் பள்ளியில் பொருட்காட்சியை 28—8—54 மாலை 5-30 மணிக்கு திரு. டி. என். உமாபதி தலைமையில், தோழர் க. அன்பழகன் அவர்கள் திறந்து வைத்து சொற்பொழிவாற்றியதின் சுருக்கம்:

"இப்பொருட் காட்சியைக் கண்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்; பள்ளி படிப்பை விட, மாணவர்கள் நடைமுறையில் தங்கள் முயற்சியினால் ஆசிரியர் உதவியுடன் பொருட்களைச் செய்து கற்பதுதான் சிறந்த கல்வி முறையாகும்; அதன் மூலம், அவர்கள் சொந்த முயற்சியினால் பல புதிய உண்மைகளை கண்டறிந்து, பல அரிய சாதனைகளைச் சாதிக்க முடியும்; மேல் நாடுகளிலே மாணவர் உலகம் எவ்வளவு உன்னத நிலையில் உயர்ந்துள்ளது என்பதை ஓரளவு அறிவோம்; ஆனால், நம் நாட்டில் மாணவர் உலகம் அழிவதற்குக் காரணம், அறியாமையும், மூட நம்பிக்கைகளும்தான்; மேல் நாட்டார் பல அரிய உண்மைகளைக் கண்டுபிடித்து, உலகிற்கு ஒளி வீசுகின்றனர்.

ஒரு சமயம் கிருஷ்ணன், பஞ்சபாண்டவர்கள், திரௌபதி முதலியவர்கள் தோட்டத்திலிருந்தபோது ஒரு மரத்திலிருந்து பழம் ஒன்று கீழே விழுந்ததாம்; உடனே கிருஷ்ணன், பஞ்சபாண்டவர்களைப் பார்த்து, 'உங்களுடைய மனதிலிருப்பதை ஒளிக்காமல் உண்மையாகச் சொன்னால் மீண்டும் இந்தப் பழம் ஒட்டிக் கொள்ளும்,' என்றாராம்; உடனே பஞ்சபாண்டவர்கள் சொல்லியும் பழம் ஒட்டிக்கொள்ளவில்லையாம்; ஆனால், திரௌபதி சொன்னதை நான் இங்கு கூற விரும்பவில்லை—உடனே பழம் ஒட்டிக்கொண்டதாம்.

ஆனால், மேல் நாட்டாருள் நியூடன் என்பவர், இதே போன்று ஒரு பழம் மரத்திலிருந்து விழுந்ததும், இது விழுவதற்குக் காரணம் என்ன என்று வெகு நேரம் வரை சிந்தித்தார். பிறகு, பூமிக்கு, இழுக்கும் சக்தி (ஆகர்ஷண சக்தி) இருப்பதால்தான் பழம் கீழே விழுந்தது என்று எண்ணினார்!

சிவன் ஒற்றைச் சக்கரத்தில் பல குதிரைகளைப் பூட்டி சவாரி செய்வதனால் சூரியன் கிழக்கே உதித்து, மேற்கில் மறைகிறது என்ற மூடநம்பிக்கையை நமது தாய்மார்களும் பெற்றோர்களும் அறிந்துகொண்டிருப்பது மிக மிகத் தவறானதாகும். இங்கிருந்து, குதிரைகள் சூரியனிடத்தில் சென்றால் அவைகள் திரும்பி வருமா என்று நீங்களே சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

பூமி தன்னைத் தானே சுற்றி வருவதால் இரவு பகல் உண்டாகிறது என்று நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

பூமியில் ஒரு பகுதியானது சமுத்திரமாகும்; இரணியாக்ஷன் என்பவன் இந்த பூமாதேவியை ஒரு பாயில் சுருட்டிக்கொண்டு கடலில் போய் ஒளிந்து கொண்டானாம்; பிறகு விஷ்ணு அதை மீட்டாராம்!

ஒரு வீட்டைச் சுருட்டி அவ்வீட்டின் அறையில் அடைக்க முடியுமா? இந்த அகண்ட பூமியின் பரப்பை கடலில் அடைக்க முடியுமா? இந்தக் கற்பனைகளை எல்லாம் மண்டைகளாகக் கொண்டாலேதான், நம்முடைய அறிவு வளர்ச்சி எப்படி முன்னேற முடியும்?

இந்தத் தவறான செய்திகளை ஏட்டிலே எழுதி, ஒரு சிலர் பிழைப்பதற்காக மாணவர்களைப் படிக்கும்படி தூண்டுகிறார்கள்.

அலெக்ஸாண்டர்—மெல்கோனி—எடிசன், கலைஞர்கள் எப்படி ஒவ்வொரு துறையிலும் முன்னேறி வருகிறார்கள் என்பதையும், அவர்களைப் பற்றியும் நாம் நன்கு படிக்க வேண்டும். இவ்வாறுதான் விஞ்ஞான அறிவு வளர்ச்சி நமக்கு உண்டாக முடியும்.

இக் காட்சியில், ஆதியிலிருந்து இன்று வரையிலுள்ள விளக்கின் முன்னேற்றத்தைப் பார்த்தேன். முதன் முதலில் சிக்கிமுக்கி கல், அகல் விளக்கு, குத்துவிளக்கு, மெழுகுவத்தி, மண்ணெண்ணெய் விளக்கு, மின்சார விளக்கு இவ்வாறாக முன்னேற்றம் அடைந்துள்ளது. கார்த்திகை என்றால் எங்கெங்கிருந்தோ அகல் விளக்குகள் வந்து குவியும். இந்த விளக்கின் முன்னேற்றம் ஆதியிலிருந்து நம் அறிவு எப்படி வளர்ந்தது என்பதை எடுத்துக்காட்டுகிறது.

நீராவிக் கப்பலைப் பார்த்தேன்; ஆனால், பார்வதி, பரமேஸ்வரன் வந்து இதைப் பார்த்து, இது, நீராவி சக்தியினால் ஓடுகிறது என்று பேசிக் கொள்ள மாட்டார்கள்.

இந்த நிலைமை வகித்திருக்கும் தலைவர் ஒரு உயர்நிலைப் பள்ளியின் தலைமையாசிரியராவார். அவர்களுக்கு, அரசாங்கத்தின் பேரால் மாணவர்கள் முன்னேற்றத்தைப் பற்றி ஆலோசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தால் அவர்களுக்கு நான் ஒரு திட்டத்தைக் கூற விரும்புகிறேன்.

மாணவர்களை — அதாவது 5 வயதிலிருந்து 15 வயது வரை— ஆசிரியர்களிடத்திலேயே ஒப்படைக்க வேண்டும்; படிக்க வேண்டிய நேரத்தில் படிப்பும் விளையாட வேண்டிய நேரத்தில் விளையாட்டும் வேண்டும்; வாரத்திற்கு ஒருமுறை பெற்றோர்களைக் காண அனுப்பவேண்டும்; அதற்கு அரசாங்கம் ஆசிரிய குடும்பத்திற்கு ஒரு தனி விடுதியும், மாணவர்களுக்கென்று அந்த விடுதிக்கு எதிரில் ஒரு விடுதியும் அமைத்து அதற்கான வசதிகளைச் செய்து தரவேண்டும்; பெற்றோர்களும் தயங்காமல் மாணவர்களை ஆசிரியர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

இந்தக் கல்வித் திட்ட முறையை அனுசரித்தால் நம் நாட்டின் மூட நம்பிக்கைகள் அடியோடு ஒழிவதும், விஞ்ஞான அறிவு வளர்ச்சி ஓங்கும் இருக்கும் என்பதில் ஐயப்பாடு இல்லை; மேலும், இந்த முறையை அனுசரித்தால் சாதி சண்டையும் ஏற்படாது."

மக்கார்தி மீது குற்றமில்லை

வாஷிங்டன், செப், 2—

தமது ஒரு சிப்பந்தியின் சார்பாக இராணுவம் மீது நிர்ப்பந்தம் பிரயோகித்ததாக மக்கார்தி மீது புகார் கூறப்பட்டது.

'மக்கார்தியை குற்றவாளியாகக் கருத முடியாது,' என்று அப்புகார் மீது விசாரணை நடத்திய நான்கு செனட்டர்கள் தீர்ப்பு கூறியுள்ளனர்.

ஆனால், அவர் தமது சிப்பந்திகளை தீவிரமான முறையில் கண்காணித்திருக்க வேண்டும் என்பது அவர்கள் கருத்து.

மலேயா சுதந்திரம்

பாகிஸ்தானின் புது முயற்சி

கராச்சி, செப். 2—

மணிலாவில் நடைபெறும் 'சீட்டோ' மகாநாட்டில் கலந்து கொள்ளும் பாகிஸ்தானும், பிலிப்பைனும் மலேயாவுக்கு சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும் என்ற பிரச்னையைக் கிளப்புவார்கள் என்று தெரிகிறது. இந்தியா உலக அரங்கில் வகிக்கும் நிலையை, தானும் அடைவதற்காக பாகிஸ்தான் செய்யும் புது முயற்சி இது என்று கூறப்படுகிறது.

வேங்கையை விரட்ட வாரீர்!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தென்னாட்டின்மீது அக்கறை கொண்டதல்ல என்பதையும் புள்ளி விவரங்களுடன் விளக்கினார்.

மேலும், பொருளாதாரத் துறையில் எப்படி வெள்ளையன் இந்த நாட்டுத் தொழிலை எல்லாம் தலைதூக்கவிடாது நசுக்கிச் செய்து கொண்டிருந்தானோ, அப்படியே வடநாட்டவரும், வெள்ளையன் காலி செய்த எல்லா தொழில்களிலும் ஈடுபட்டு, தென்னாட்டை மார்க்கெட்டாகப் பயன்படுத்தி வருகிறார்கள் என்பதையும் குறிப்பிட்டு, தென்னாடு வடவர் பிடியிலிருந்து விடுபட்டால் அன்றி ஏழை திராவிடர் சமுதாயம் மானத்தோடு கூடிய நல்லதோர் வாழ்வைப் பெறுவதென்பது இயலாதென்பதை நினைவுறுத்தினார்.

"வடநாட்டிலிருந்து வந்த அகதிகளுக்கு இங்கு வாழ்வு தந்த டில்லி அரசு, இலங்கையிலிருந்து விரட்டப்படும் தமிழர்களுக்கு ஆதரவு தர இயலாதென்று தெளிவாகத் தெரிவித்திருப்பதின்மூலம் கூட நாம், வடநாட்டவரால் புறக்கணிக்கப் படுகிறோம் என்ற உண்மையை அறிந்துகொள்ள முடியும் என்றும் குறிப்பிட்டார்.

"எனவே, இந்த நாட்டு மக்களெல்லாம் ஒருமித்து, ஒரு குரலாய், திராவிட நாடு திராவிடருக்கு ஆகத்தான் வேண்டும் என்று கூறினால், நிச்சயமாக நாம் விடுதலை அடைந்தே தீருவோம்; வெள்ளையனிடமிருந்து விடுதலை பெறப் போரிட்டு, தியாகத் தழும்பேறுள்ள காங்கிரஸ்காரர்கள், வாழ்விழந்து தவிக்கும் தென்னாடு, வடவர் பிடியிலிருந்து விடுதலை பெறவேண்டும் என்ற லட்சியத்தை எண்ணிப் பார்த்து, அந்த விடுதலைப் போரில் பங்கு பெற முன்னோடிகளாய் வரவேண்டுமென அவர்களை அன்புடன் அழைக்கிறேன்."

பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் முதலில் குறிப்பிட்டதாவது:—

"இந்த ஊரிலே காங்கிரஸ் நடத்திய விடுதலைப் போரில் பங்கு பெற்று தியாகத் தழும்பேற்றவர்கள் பலரிருப்பதாகக் கூறினார்கள். அந்தக் காங்கிரஸ் நண்பர்கள் தி. மு. கழகத்தின் லட்சிய விளக்கத்தைப் பெறவேண்டுமென விரும்புகிறேன்.

காங்கிரஸ் நண்பர்கள் எந்த வகை சுயராஜ்யம் காண விரும்பினார்களோ, அந்தச் சுயராஜ்யம், இன்று நடைமுறையில் உள்ளதா?

எந்தவகை நல்வாழ்வை எதிர்பார்த்து காங்கிரஸ் நண்பர்கள் கஷ்ட நஷ்டங்கள் ஏற்றுக் கொண்டார்களோ, அந்தவகை நல்வாழ்வு நாட்டு மக்களுக்கு இன்று கிடைத்திருக்கிறதா?

அடக்குமுறை ஒழியும்; மக்களின் வாட்டம் ஓட்டப்படும்; பசியும், பஞ்சமும் தூரத்தப்படும்—என்று நாட்டவருக்கு சொன்னார்களே, அது நடைபெற்றதா?

அவர்கள் பார்க்க விரும்பிய நாட்டையா, இன்று பார்க்கிறார்கள்?

இவைகளை யெல்லாம் காங்கிரஸ் தியாகிகள் நிதானித்துப் பார்க்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

தி. மு. கழகம் இன்று வேகமாக வளர்ந்து வரும் மக்கள் சக்தியாக இருக்கிறது.

தி. மு. கழகத்தில் இருந்து பணியாற்றியவர்களெல்லாம் மிக மிகச் சாதாரணமானவர்கள்.

பிட்டா, மிராசுதாரோ பெரும் பணக்காரர்களோ இங்கில்லை; அவர்களெல்லாம் இல்லை என்ற வருத்தத்திலல்ல, நான் இதைச் சொல்லுவது! அப்படிப்பட்ட பெரும் பணக்காரர்களும் நடத்தி வந்த ஜஸ்டிஸ் கட்சியிலே நானுமிருந்திருக்கிறேன். அவர்கள் நீங்கிய ஜஸ்டிஸ் கட்சியைத் திராவிடர் கழகமாக மாற்றியவனும் நான்தான்; எனவே, அந்தவகை பணக்காரர்களின் கூட்டுறவின்றி தி. மு. கழகம் இயங்கிவருகிறது.

பண பலமதான் இல்லையென்றால், பத்திரிகை பலமுமில்லாத ஒரு கட்சி, தி. மு. கழகம்!

'இந்து'வின் இதமும், 'தினமணி'யின் ஆதரவும், 'ஆனந்த விகட'னின் ஆசியும், 'கல்கி'யின் கனிவுரையும், கடுகளவும் கிடைக்காதது மட்டுமின்றி, வசையுரைகளுக்கு இலக்காகியும், வளர்ந்து வரும் கட்சி தி. மு. கழகம்.

சொற் பயிற்சிக் கூட்டம்

5—9—54 காலை 10 மணிக்கு சென்னை, முத்தியாலுப்பேட்டை, எண். 17, சாலைவிநாயகர் கோவில் தெரு, முத்தமிழ் மன்றத்தில் தோழர் என். ஆர். ஜி. [illegible] தலைமையில் 'பட்டமும் பதவியும்' என்னும் பொருள் பற்றி பல சொற்பயிற்சியாளர்கள் பேசுவர்.

5—9—54 காலை 9 மணிக்கு சென்னை 50-வது வட்ட தி. மு. கழக மனையில் '[illegible]' என்னும் பொருள் பற்றி சொற் பயிற்சிக் கூட்டம் தோழர் சி. [illegible] தலைமையில் நடைபெறும்.

நிராசை உபதேசம்!

வெங்கடேஸ்வரா ஜங்கலக் கழகம் வெங்கடாசலபதியின் தர்மத்தால்—அதாவது, மக்கள் தரும் காணிக்கைகளால்—நடைபெறுகிறது; ஆனால்—கோவில் பணத்தை வேறு தர்ம காரியங்களுக்குப் பயன்படுத்தக் கூடாது; அது பகவானின் பெருமையை வளர்க்கவே பயன்பட வேண்டும்—என்று இப்போது நாட்டிலே சிலர் கூறி வருகிறார்கள்.

இந்த எதிர்ப்பாளர்கள் திருப்திக்காக, வெங்கடாசலபதியின் பணத்தை நாங்கள் வீணாக்கப் போவதில்லை; அவரின் பெருமையைக் கூறும் இந்து தர்மத்தையும், தத்துவத்தையும் வளர்க்கவே பயன்படுத்துகிறோம்,' என்று கூறியதின் மூலம் எதிர்ப்பாளர்களின் மனது சாந்தி அடைய, சுப்பாராவ் இவ்விதம் பேசினாரோ என்னவோ! இல்லையேல், இந்து மத வேத பாராயணம் செய்ய புதிய கட்டிடம் ஏன், திறப்பு விழா ஏன்? ஆண்டாண்டு காலமாகத்தான் அதே திருப்பதியில் உண்ணும் நேரம் போக எஞ்சிய நேரத்தில் வேதம் ஓதி வருகின்றனரே! இப்பொழுது புதிதாக 12 இலட்ச ரூபாய் செலவு செய்வது எதற்காக?

☆

ஆனால், இங்கே, தமிழ் நாட்டில் இந்து மதப் பிரச்சார வேலை வேகமாக நடக்கிறது!

சென்னைப் பிரசன்ன விநாயகர் கோவிலில், விநாயகரின் பெருமையைப் பற்றிப் பேசிய ஆச்சாரியார் மதத்தைப் பரப்ப, வெங்கடேஸ்வரா மங்கலக் கழகம் போன்று 10 அல்லது 12 இலட்சம் ரூபாய் செலவழித்து கட்டிடம் கட்டுவது அவசியம் இல்லை என்பதைப்போல், 'நடமாடும் மத இயக்கம்,' ஒன்றை ஆரம்பித்து வைத்திருக்கிறார்.

இந்த நடமாடும் இயக்கம், கோவில் கோவிலாகச் சென்று மதத்தைப்பரப்ப பிரச்சாரம் செய்யுமாம்!

மலேரியா ஒழிப்பு இயக்கம், மஞ்சள் சுர ஒழிப்பு இயக்கம் என்று உலகிலே பிரச்சாரம் செய்கிறார்கள் அல்லவா? அதுபோல், இங்கே கோவில் கோவிலாகச் சென்று, இந்த இயக்கம், மதப் பிரச்சாரம் செய்யுமாம்!

திருக்கோவில் வழிபாட்டு இயக்கத்தை தனது பூரண ஆசீர்வாதத்துடன் ஆரம்பித்து வைத்த அன்பர் ஆச்சாரியார், கடவுள் விஷயத்தில் இந்த நாட்டில் சிலருக்கு புதிதாகச் சந்தேகம் உண்டாகிவிட்டது என்பதையும் எடுத்துக் காட்டி, 'பயப்படாதீர்கள்; இது ஆதிகாலம் தொட்டே உண்டாகித் தீர்ந்துபோன சந்தேகங்கள்,' என்று பல்லவியும் பாடியிருக்கிறார்!

நூறு ஆண்டுகளாக நாட்டில் படிப்பு முறை மாறிவிட்டதால், திருக்கோயில் வழிபாட்டு இயக்கம் போன்றவைகளுக்குத் தக்கபடி போதனை அளிப்பது கஷ்டமாகப்போகிறதாம்! இம்மாதிரி இயக்கங்கள், பல ஆண்டுகள் நடைபெற்றால், தெய்வ பக்தியூட்டும் ஆசிரியர்கள் கிடைப்பார்களாம்!

'பழைய விஷயம் அது; ஆனால், புதிதாகிவிட்டது; இடையில் ஏற்பட்ட சரித்திர நிகழ்ச்சிகளின் காரணமாக இக்கூட்டம் ஏற்பட்டுவிட்டது,' என்ற அநுபல்லவியைப் பும் அங்கே அன்பர் ஆச்சாரியார் பாடியிருக்கிறார்!

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

கடவுள் விஷயத்தில் இவர்களுக்கும் புதிதாக சந்தேகம் வந்துவிட்டது என்று கூறுவதோடு மட்டும் ஆச்சாரியார், தன் அறிவுரையை நிறுத்தவில்லை; மிகப் பெரியதோர் உண்மையையும் கண்டுபிடித்திருக்கிறார்—நம் நாட்டின் குறை, தரித்திரம் அல்ல; கடவுள் பக்தி வேண்டும்; தெய்வ பக்தி என்ற விதையை மண்ணில் போட்டால் இதர பண்பாடுகள் எல்லாம் தாமே வளரும்—என்பது ஆச்சாரியாரின் ஆராய்ச்சியில் தோன்றியது!

நம் நாட்டின் நிலை தரித்திரம் அல்லவாம்! எவ்வளவு பெரிய கண்டுபிடிப்பு பார்த்தீர்களா? அமைச்சர் பதவியிலிருந்து விலகிய பிறகு ஆச்சாரியாரின் ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்ட உண்மைபோலும் இது!

தரித்திரம் என்ற உடனே ஆச்சாரியாருக்கு மக்கள் மீது வெறுப்பு பிறந்துவிட்டது—'எல்லோரும் பணம் சம்பாதிக்க வேண்டுமென்ற ஆசை இந்தக் காலத்தில் ஏற்பட்டுள்ளது; அதனால் மோசம், கள்ளத்தனம் ஆகியவை பெருகிவருகிறது; இதை நிறுத்த வேண்டும்; இதற்கு தெய்வ பக்தி அவசியம்,'—இது அவரின் அருள் வாக்கு!

முன்பு ஒரு தடவை, 'இந்த நாட்டில் எல்லோருக்கும் படிக்க வேண்டுமென்ற ஆசை பிறந்துவிட்டது; இது கூடாது' என்று பேசினார்!

அதாவது, ஆச்சாரியார் கருத்துப்படி, மனிதன் மண்ணாசை, பெண்ணாசை, பொருளாசை என்ற மூவகையும் ஆசைகளை மறக்க வேண்டுமென்பது உபதேசம்! மகான் என்று அழைக்கப்படுபவர் அல்லவா? அதனால் தான் நிராசை பற்றிப் பேசுகிறார்—போதனை செய்கிறார்!

அவருக்கென்ன—நன்றாக உபதேசம் செய்வார்! படித்தார்; பட்டம் பெற்றார்; வக்கீல் தொழிலில் பணத்தையும் சேர்த்தார்; நாட்டிலே உள்ள எல்லா வேலைகளையும் பார்த்து, கடைசியில் கவர்னர்-ஜெனரல் வேலையும் பார்த்தாகிவிட்டது! மாதா மாதம் டில்லியிலிருந்து 'பென்ஷன்' வருகிறது! மகனையோ, நல்ல இடத்தில் கட்டிக் கொடுத்தாய்விட்டது! இனி கவலையில்லை என்ற நிலையும் ஏற்பட்டுவிட்டது! இனி ஏதாவது பதவி கிடைக்குமா என்று எண்ணவும் முடியாதவாறு, தமிழக அரசியல் மாறிவிட்டது.

ஆகவே, அவர் இப்போது நிராசை உபதேசம் செய்கிறார். எல்லா வசதிகளையும் அனுபவித்த பின்னர்தான், ஆச்சாரியாருக்கு, எல்லோரும் பணம் சம்பாதிக்க வேண்டுமென்று எண்ணுவது புலப்படுகிறது! 'ஆசைகளை ஒழியுங்கள்,' என்று உபதேசம் செய்கிறார்!

ஆச்சாரியாரைப் போலவே எல்லோரும் ஏராளமான வசதிகளைச் சேர்த்துக்கொண்டு, இன்பங்களை அனுபவித்துவிட்டு, 'ஆசை கூடாது,' என்று பேச முடியுமானால் பரவாயில்லையே! ஆனால், நாட்டு நிலைமை அப்படியில்லையே! நாட்டுமக்களிலே பலர், என்னினாலும், அன்றாடம் வயிற்றை நிரப்பவே பொருள் திரட்ட வாய்ப்பில்லையே! அதற்கு ஏதாவது வழியிருக்கிறதா?

—சிவம்.

கழகக் கூட்டம்

☆

சம்மட்டிபுரம்

5—9—54 மாலை 6 மணிக்கு

பேசுவோர்:

எம். என். ராமசாமி
எம். ஆர். கணேசன்
க. சீ கலியபெருமாள்

திருமணம்

5—9—54 காலை 9 மணிக்கு [illegible], மண்ணடி, எண். 33 [illegible] தெரு [illegible] தோழர் [illegible] திருமணம் தோழர் [illegible] தலைமையில் நடைபெறும். தோழர்கள் [illegible], என். வி. நடராசன், [illegible] மணிமொழியார், மன்னை [illegible], [illegible] அருண்மொழி ஆகியோர் திருமண வாழ்த்துரை வழங்குவர்.

நெல்லை மாவட்ட
தி.மு.க.மாநாடுகள்

தொண்டர் படை

தொண்டர் படைத் தலைவர்களான மா. சண்முகம், எஸ். செல்லப்பாண்டியன் அறிவிப்பதாவது:—

"நெல்லை மாவட்ட தி. மு. கழக இரண்டாவது மாநாடு இந்த மாத இறுதியில் நடைபெற இருக்கிறது. அவற்றின் தொண்டர்களாகச் சேர்ந்து பணியாற்ற விரும்பும் தோழர்கள், உள்ளூர் கழகச் செயலாளர்களிடமிருந்து ஒப்புதல் கடிதம் பெற்று, தங்கள் பெயர்களை மாநாடு அலுவலகத்தில் ஒரு வாரத்திற்கு முன்பே பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்."

முகவரி:—மாநாடு அலுவலகம், 3, பூசப் பில்டிங், பெருவழி, செங்கோட்டை.

தூத்துக்குடி சதி வழக்கு

வெளியிலிருந்து கல் வந்ததைக் கண்டிப்பாய் வீட்டுக்குள் விழும்; 45-வயது எதிராளி 5 அடி தூரத்தில் பார்த்தேன்; கொத்து மீசையுள்ளவன்தான் என்று நான் இன்ஸ்பெக்டரிடம் கூறவில்லை; கல்லெறிந்தவர்களில் சிலருக்கு மீசை இருந்தது; 9-30 மணிக்கு கோர்ட்டுக்குப் போகத் தயாராக இருந்தேன்; அன்று, அந்த கோர்ட்டுக்குப் போக இருந்தேன் என்று எனக்கு ஞாபகமில்லை; எங்கள் வீட்டிற்கும் பேஹார் ஸ்டேஷனுக்கும் 2 பர்லாங்கு இருக்கும்; எனக்கு பயமாக இருந்தது, அதனால் நான் வெளியே போகவில்லை"

[illegible] இன்னும் [illegible] தோழர் [illegible] ஜி. [illegible] [illegible] தொடரும். [illegible] ஜி. [illegible]

சேலம் நகர தி. மு. கழக

நிதி நாடகங்கள்



☆

சேலம் விக்டோரியாவில்

5-9-54 ஞாயிறன்று

மதுரை பி. எஸ். செல்வா & பி. எஸ். கஜேந்திரன் குழுவினர் [illegible]

மாலை 6-30 மணிக்கு: '[illegible]'

இரவு 10 மணிக்கு: '[illegible]'

நல்ல வாய்ப்பு! [illegible]!

கட்டணம்: 2—8—0, 1—8—0, 0—12—0, 0—6—0

—நகர தி. மு. கழகம் சேலம்